**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 19.06.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவகா்களுக்கு ஃ பெடரல் வங்கி ஹாா்மிஸ் நினைவு அறக்கட்டளை உதவித்தொகை -2023-24**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு பாட பிரிவில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கும் ஃபெடரல் வங்கி ஹாா்மிஸ் நினைவு அறக்கட்டளை உதவித்தொகை 2023-24 மூலம் கல்வி உதவித்தொகை வழங்கும் விழா தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள Rasi Seeds அரங்கத்தில் 18.06.2024 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழத்தின் துணைவேந்தர் முனைவர் V.கீதாலட்சுமி, வேளாண்மை முதன்மையர் முனைவர் N.வெங்கடேச பழனிச்சாமி, மூத்த துணைத் தலைவர் மற்றும் நாட்டின் தலைவர் கிளை வங்கி திரு.ஏக்பால் மனோஜ், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மூத்த துணைத் தலைவர் மற்றும் மண்டலத் தலைவர் திரு ஜித்தேஷ் P.V , கோவை துணைத்தலைவர் மற்றும் மண்டலத் தலைவர் திருமதி.P.கல்பனா மற்றும் பல்கலைக்கழக அலுவலா்கள் கலந்துகொண்டனா்.

வேளாண்மை முதன்மையா் முனைவா் N.வெங்கடேச பழனிச்சாமி அவா்கள், தனது வாழ்த்துரையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக இயங்கி வரும் ஒருங்கிணைப்பு கல்வி உதவித் தொகை மையமானது பொருளாதார ரீதியாக பின்தங்கிய, மாற்றுத்திறனாளி மாணவ மாணவிகளுக்கும் மற்றும் ஒற்றை பெற்றோா் உள்ள மாணவ மாணவிகளுக்கும் பல்வேறு தொண்டு நிறுவனங்களின் மூலம் கல்வி உதவித்தொகை ஏற்பாடு செய்து வருவதாகவும் தற்போது ஃபெடரல் வங்கி ஹாா்மிஸ் நினைவு அறக்கட்டளை மூலம் 39 மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை இவ்விழாவின் மூலம் வழங்கப்பட உள்ளதாகவும் கூறினாா்.

திரு.ஏக்பால் மனோஜ் அவா்கள் தனது உரையில் கடந்த ஆண்டு வேளாண்மைப் பல்கலைக்கழத்தில் பயின்ற 9மாணவ மாணவிகளுக்கு ஃபெடரல் வங்கி ஹாா்மிஸ் நினைவு அறக்கட்டளை மூலம் ஒவ்வொரு மாவணா்களுக்கும் அதிகபட்சமாக ரூ.1,00,000/- வழங்கப்படுவதாக கூறினாா். ஆதே போன்று தற்போது 39 மாணவ, மாணவா்களுக்கு வழங்கப்பட உள்ளது என தெரிவித்தாா். மாணவா்கள் தாங்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம், சிறப்புக் கட்டணம், விடுதி வாடகை, மெஸ் கட்டணம், தோ்வுக் கட்டணம், ஒரு மடிக்கணினியின் விலை போன்றவை உள்ளடங்கும் எனக் கூறினாா்.

திரு ஜித்தேஷ் V.P அவர்கள் கூறுகையில் மாணவர்கள் ஏதாவது ஒரு ∴பெடரல் வங்கியில் தங்களினல் சேமிப்பு கணக்கை துவக்கி வைப்பதன் மூலம் மாணவர்களின் வங்கிகளில் கல்வி உதவித்தொகை செலுத்தப்படும் என கூறினார். மாணவர்களின் இந்த நல்தொரு வாய்ப்பை பயன்படுத்தி நன்முறையில் கல்வி பயிலவேண்டும் என உரைத்தார். இந்த ஆண்டு மட்டுமல்லாது மாணவர்கள் படிப்பு முடியும் வரை நான்கு ஆண்டுகளுக்கும் இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் V.கீதாலட்சுமி அவர்கள் விழாவின் தலைமை உரையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் பல்வேறுவிதமானகல்வி உதவித்தொகை விவரங்களையும் இதனால் பல மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று தமது கல்வியினை சிறந்த முறையில் பயில்கிறார்கள் என கூறினார். மேலும் ∴பெடரல் வங்கி ஹார்மிஸ் நினைவு அறக்கட்டளை சார்பாக 1960 மாணவர்களுக்கு அதாவது மருத்துவம், பொறியியல் மற்றும் வேளாண்மை துறையைச்சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கியுள்ளது எனவும் 2023-2024 ம் ஆண்டில் 4060 விண்ணப்பங்களில் 476 மாணவர்கள் தேர்வாகியுள்ளர் அதில் 39 மாணவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் தேர்வு செய்த ∴பெடரல் வங்கி ஹார்மிஸ் நினைவு அறக்கட்டளைக்கு வாழ்த்துக்ளைத் தெரிவித்தார். இக்கல்வி உதவித்தொகை திட்டத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு ∴பெடரல் வங்கி ஹார்மிஸ் நினைவு அறக்கட்டளை சார்பாக சான்றிதழ்களை துணைவேந்தர் வழங்கினார்.

விழாவின் போது திருமதி.P.கல்பனா, துணைத்தலைவர் மற்றும் மண்டலத் தலைவர் கோவை அவர்கள் தனது உரையில் தானும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற முன்னால் மாணவி என்றும் ∴பெடரல் வங்கி ஹார்மிஸ் நினைவு அறக்கட்டளை சார்பாக வழங்கப்படும் இந்த கல்வி உதவித்தொகையின் மூலம் மாணவ மாணவியர் பயன்பெற்று எதிர்காலத்தில் மற்ற மாணவர்களுக்கு உதவுகோலாக இருக்க வேண்டும் என்று கூறி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

நிகழ்ச்சியின் இறுதியில் பல்கலைக்கழகத்தின் கல்வி உதவித்தொகை ஒருங்கிணைப்பு அதிகாரி முனைவர் P.G.கவிதா, ∴ பெடரல் வங்கி ஹார்மிஸ் நினைவு அறக்கட்டளை நிறுவனத்திற்கும் ஊன்று கோலாக இருந்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கும் நன்றி கூறினார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***